31st March 1969]

எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள் அனைவரும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக உயர்த்தப்பட வேண்டும் என்ற அரசு திட்டப்படி இதுவரை இம்மாநிலத்தில் பதவி உயர்த்தப்பட்ட எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களின் எண்ணிக்கை 1—1—1969 அன்றுள்ளவாறு எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 6,500.

Teachers' Welfare Fund

* 320. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the requisition of Elementary School Teachers that the Teachers' Welfare Fund should be allotted 'Educational District-wise' so as to enable immediate assistance; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) அரசு அக்கோரிக்கையை ஏற்கவில்லை.

Technical Training School at Srivilliputhur

* 321. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to establish a Technical Training School at Srivilliputhur during the Fourth Five-Year Plan ?

ஸ்ரீவில்லிபுத்தூருக்கு தொழிற் பயிற்சிப் பள்ளி

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Handwriting of students

* 322. *Q.*—THIRU SAW GANESAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the steps taken by the Government to improve the handwriting of the students in schools and colleges ?

மாணவர்களின் கையெழுத்து

திரு. சா. கணேசன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

பள்ளி கல்லூரிகளில் மாணவர்களின் கையெழுத்து திருத்தமாய் அமைய அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பள்ளிகளைப் பொறுத்த வரையில் கையெழுத்து திருத்தமாய் அமைய தேவையான ஏற்பாடுகள் மாணாக்கர்களின் பாட திட்டத்திலேயே இடமளிக்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பள்ளி நிலையில்தான கையெழுத்தை நல்ல முறையில் திருத்தமுடியுமே தவிர கல்லூரி நிலையில் அல்ல.

Labourers of the Corporation of Madras

* 323 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Corporation workers met the Chief Minister on the 13th January 1968 ;

(b) the assurance given to them by the Chief Minister ; and

(c) the action taken thereon ?

சென்னை மாநகராட்சி தொழிலாளர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சி தொழிலாளர்கள் 1968 ஜனவரி 13-ம் தேதி முதல் அமைச்சரை சந்தித்தார்களா ?

(இ) அவர்களுக்கு முதல் அமைச்சர் கொடுத்த வாக்குறுதி என்ன ?

(உ) வாக்குறுதியின் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இதுகுறித்து தகவல் எதுவும் இல்லை.

(இ) சென்னை மாநகராட்சித் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் 13—1—1968-ல் முன்னாள் முதலமைச்சரைச் சந்தித்ததாகக் கூறப்படும் நாளன்று அவர்களுக்கு அவர் என்ன உறுதிமொழி கொடுத்தார் என்பது பற்றி அரசு அறியாது.

(உ) இவ் வினா எழவில்லை.

Strike by Madras Corporation Workers

* 324. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the workers of the Madras Corporation struck work in December 1967 ; and

(b) if so, the nature of their demands ?

சென்னை மாநகராட்சி ஊழியர்கள் வேலை நிறுத்தம்

திரு என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967 டிசம்பரில், சென்னை மாநகராட்சி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆமெனில், இவர்களின் கோரிக்கைகள் யாவை ?